பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 03 2025 7 15

தலைப்புச் செய்திகள்

1. வருங்கால சந்ததியினருக்கு தூய்மையான சுற்றுச்சூழலை வழங்க வேண்டிய தார்மீக பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்
2. பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மியான்மருக்கு ஆபரேஷன் பிரம்மா திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
3. இந்தியா – அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகள் இன்று புதுதில்லியில் நிறைவடைந்தது.
4. நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.
5. அஹமதபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அடில் கல்யான்பூர் - ஆஸ்திரேலியாவின் **Kody pearson** இணை பட்டம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

வருங்கால சந்ததியினருக்கு தூய்மையான சுற்றுச்சூழலை வழங்க வேண்டிய தார்மீக பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சுற்றுச்சூழல் குறித்த தேசிய மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையை கடைபிடிப்பது குறித்தும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒவ்வொரு நடவடிக்கைகள் குறித்தும் எச்சரிக்கையுடன் செயல்படுத்துவது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்றும் கூறினார்.

பாதுகாப்பான சுற்றுச்சூழலை உறுதி செய்வது நம் ஒவ்வொருவரின் கடமை என்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ், குறைந்த அளவு கரியமில வாயுவை வெளியேற்றும் தொழில்நுட்பத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருளாதார வளர்ச்சி பருவநிலை சவால்களை எதிர்கொள்வதற்கான கருவி என்றும் அவர் தெரிவித்தார்.

2030-ஆம் ஆண்டுக்குள் 50 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்வதற்கான இலக்கை எட்டுவதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மருக்கு உதவுவதற்காக இந்தியா ஆபரேஷன் பிரம்மா திட்டத்தை தொடங்கியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீப் ஜெய்ஸ்வால், முதல்கட்டமாக 15 டன் எடையுள்ள நிவாரணப் பொருட்கள் இன்று மாலை மியான்மருக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

யாங்கன் நகரில் நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட அந்நாட்டுக்கான இந்திய தூதர், நிவாணப் பொருட்களை பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகக் கூறினார்.

கூடாரங்கள் அமைப்பதற்கான தார்பாய்கள், போர்வைகள், அத்தியாவசிய மருந்துகள், சோலார் விளக்குகள், சமையல் பாத்திரங்கள், உணவு பொட்டலங்கள் உள்ளிட்டவை இந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

மியான்மரில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளுக்காக இரண்டு சிறிய ரக விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், 80-க்கும் மேற்பட்ட பேரிடர் மீட்புப்படையினரும் **Nay pyitaw** பகுதிகளில் அவர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளதகாவும் திரு ஜெய்ஸ்வால் கூறினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இந்திய மக்களுடன் நமது தூதரகம் தொடர்ந்து தொடர்பில் உள்ளதாகவும் திரு ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

இதனிடையே பிரதமர் திரு நரேந்திரமோடி மியான்மர் ராணுவ தளபதி ஜெனரல் Min Aung –ஐ தொலைபேசியில் தொடர்பு கொண்டு அங்குள்ள நிலைமை குறித்து கேட்டறிந்தார்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு தமதுஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததாக பிரதமர் கூறினார்.

இந்தியாவின் நெருங்கி நட்பு நாடாக இருந்து வரும் மியான்மருக்கு பேரிடர் காலத்தில் தேவையான உதவிகளை இந்திய வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிவாரணப் பொருட்கள் மற்றும் மீட்புப் படையினர் ஆபரேஷன் பிரம்மா திட்டத்தின் கீழ் மியான்மருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திரமோடி, மியான்மர் ராணுவ தளபதியிடம் கூறினார்.

[]<<<>>>[]

பீகார் மாநிலத்தில் ஆட்சியில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மக்களுக்கான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாக பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பிஜேபி சார்பில் இன்று நடைபெற்ற பீகார் தின கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு பேசிய அவர், பல மாவட்டங்களில புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளதாகக் கூறினர்.,

தேசப்பிதா மகாத்மா காந்தி சத்தியாகிரகத்தை தொடங்கியது பீகார் மாநிலத்தில்தான் என்று தெரிவித்தார்.

மறைந்த தலைவர் ஜெயபிரகாஷ் நாராயண், அவசர நிலைக்கு எதிரான தமது போராட்டத்தைத் தொடங்கியதும் பீகார் மாநிலத்தில்தான் என்றும் திரு நட்டா குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்தியா வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்பட உள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

இந்தியா – அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகள் இன்று புதுதில்லியில் நிறைவடைந்தது.

கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் இரு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு 2030-ஆம் ஆண்டுக்குள் வர்த்தகத்தை 500 பில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்துவது குறித்த கூட்டறிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கடந்த பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி வெளியிடப்பட்ட இந்த கூட்டறிக்கையில் இருதரப்பிலும் பலனளிக்கக்கூடிய வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது என அறிவிக்கப்பட்டிருந்தது.

இருதரப்பு பேச்சுக்களின்போது ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் குறித்தும், சந்தை விரிவாக்கம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இரு நாடுகளும் பயன்பெறும் வகையில் வரி கட்டமைப்பை சீரமைப்பது குறித்தும் இந்த நான்கு நாள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்ட மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், அமெரிக்காவின் வர்த்தகத்துறை அமைச்சர் ஜெமிசன் **greer** மற்றும் பிரதிநிதிகளுடன் காணொலி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தியா – அமெரிக்க இடையேயான பேச்சுவார்த்தை முடிவுகள் வெற்றிகரமாக அமைந்துள்ளதாக இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

**[]<<<>>>[]**

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் புரட்சிகரமான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

திருச்சி இந்திய மேலாண்மை கல்விக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி பேசிய ஆளுநர், அனைத்து துறைகளிலும் இந்தியா தற்போது வளர்ச்சி பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறுமைக்கோட்டிற்கு மேலே கொண்டு வரப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மகளிருக்கான வாழ்வாதாரத்தையும், அதிகாரத்தையும் உறுதி செய்யும் நோக்கில் பல திட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் கடந்த ஆண்டில் மட்டும் ஒரு கோடியே 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் முத்ரா திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்றுள்ளதாகவும், இதில் 50 சதவீத்திற்கும் மேற்பட்டோர் பெண்கள் என்றும் அவர் கூறினார்.

2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறினார்.

பட்டம் பெற்றுள்ள மாணவர்கள் தங்களது இலக்கை வலுவான ஒன்றாக தீர்மானிக்க வேண்டுமென்று கூறிய ஆளுநர், அதற்கான முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

பீகார் மாநிலத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன.

அம்மாநில கல்வி வாரியம் இன்று வெளியிட்டுள்ள தேர்வு முடிவுகளில் 82 புள்ளி ஒரு சதவீத மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேர்வு முடிவுகளை வெளியிட்டு பேசிய அம்மாநில கல்வி அமைச்சர் திரு சுனில் குமார், வெற்றிபெற்றவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளளார்.

**[]<<<>>>[]**

அஹமதபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அடில் கல்யான்பூர் - ஆஸ்திரேலியாவின் **Kody pearson** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அந்த இணை 6-3. 4-6, 16-14 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் நிக் சாப்பல் - கஜகஸ்தானின் **GriGori** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாத்தில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

***End of News***